## பொய் வாக்குறுதிகளை கொடுத்ததால்

# பா.ஜ.க.வுக்கு கர்நாடகா தேர்தலில் மக்கள் சவுக்கடி!

### ஒட்டன்சத்திரத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு

ஒட்டன்சத்திரம்,மே.15- திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகர திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா, முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா, திராவிட மாடல் அரசின் இரண்டாம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகர செயலாளர் வெள்ளைச்சாமி வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட அவைத் தலைவர் மோகன், ஒன்றிய செயலாளர் தர்மராஜன் ,நகர் மன்ற தலைவர் திருமலைசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலு, செல்வராஜ், நகர அவைத் தலைவர் சோமசுந்தரம், ஒன்றிய பெருந்தலைவர் அய்யம்மாள், துணைப் பெருந்தலைவர்கள் காயத்திரிதேவி, தங்கம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனார்.



கூட்டத்தில் மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா எம்.பி., உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேசுகையில்,

தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து சலுகை, விவசாயிகளுக்கு 2 லட்சம் மின் இணைப்பு, சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி 20 லட்சமாக உயர்வு, நகைக்கடன் தள்ளுபடி, ஜுன்.3ந் தேதி முதல் 18 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம், ஒரு லட்சம் பேருக்கு முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட 80 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார்.

தமிழக தேர்தல் அறிக்கையை வைத்து தான் கர்நாடகாவில் காங்கிரஸார் வாக்குறுதி அளித்து இருந்தனர் . பா.ஜ.க. அரசு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 15 லட்சம் வங்கி கணக்கில் செலுத்துவது, ஆண்டுக்கு 2 கோடி நபர்களுக்கு வேலை வாய்ப்பு என பொய்யான வாக்குறுதி கொடுத்ததால் மக்கள், கர்நாடகா தேர்தலில் சவுக்கடி கொடுத்துள்ளனர்.

ஒட்டன்சத்திரம் நகர மக்களின் நீண்ட நாள் குடிநீர் பிரச்சினை தீர்ப்பதற்காக ரூ. 130 கோடி நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளன.

பரப்பலாறு அணை சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

விரைவில் தூர்வாரப்பட்டு சுற்றுலா மையமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

20 மணி நேரம் மக்களுக்காக உழைக்கும் முதல்வருக்கு வரும் நாடாளுமன்ற தேர்தலில் நீங்கள் ஆதரவு அளிக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

மேலும் இந்நிகழ்வில் போடி காமராஜ் ,நகரத் துணைச் செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி ,கிரிஜா சுப்பிரமணி, பொருளாளர் சதானந்தம், மாவட்ட பிரதிநிதிகள்சிவகுமார், கனகராஜ், சுலைமான், அரசு ஒப்பந்ததாரர் வேலுச்சாமி, உள்ளிட்ட நகர் மன்ற உறுப்பினர்கள் வார்டு செயலாளர்கள், தகவல் தொழில் நுட்பம் , மாணவரணி, மகளிர் அணி, இளைஞரணி நிர்வாகிகள் உள்ளிட்ட சுமார் 2ஆயிரத்திற்கும

மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன் நன்றி கூறினார்.

## ரூ.116.48 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்! ரூ.61.98 கோடி செலவில்

# கொளத்தூர் தொகுதியில் ‘மேயர் சிட்டிபாபு மேம்பாலம்’

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 15-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகரில் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழைய குடிநீர் குழாயை மாற்றி புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 96 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, வில்லிவாக்கத்தில் 61கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு மேம்பாலத்தை திறந்து வைத்தார்.

எரிசக்தித் துறை சார்பில் கணேஷ் நகரில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

சென்னை பெருநகர மாநகராட்சியில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் மிக வேகமாக வளர்ந்துவரும் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த முக்கிய பகுதியாக விளங்கு கிறது. இப்பகுதியின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் கணேஷ் நகரில் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள 230/33 கிலோ வோல்ட் வளிமகாப்பு துணை மின் நிலையத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த துணை மின் நிலையம் அமைப்பதன் மூலம் கொளத்தூர், பெரியார் நகர், அன்னை நகர், கணேஷ் நகர் மற்றும் நேர்மை நகர் ஆகிய பகுதிகளுக்கு மின் கட்டமைப்பை வலுப்படுத்தவும், அதிகரித்து வரும் மின் தேவையை சீராக வழங்கவும் இயலும். இதன்மூலம் 3,19,000 மின்நுகர்வோர்கள் பயன்பெறுவார்கள்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கடேசன் சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; கார்த்திகேயன் சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 1கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; மாதவரம் நெடுஞ்சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழுதடைந்த பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 1 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; ராஜா தெரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழுதடைந்த பழைய குடிநீர்க் குழாயை மாற்றி 39 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி, என மொத்தம் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம். காலனி 34வது தெருவில் உள்ள காலி நிலத்தில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடம் கட்டும் பணி; ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் 33வது தெரு சந்திப்பில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16ஆம் நாள் காரிய கூடத்தில் கூடுதலாக உணவு அருந்தும் கூடும் கட்டும் பணி; ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் அமைந்துள்ள மின்சார மயான பூமியை 41 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திரவ பெட்ரோலிய வாயு மயான பூமியாக மாற்றும் பணி, என மொத்தம் 96 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**வில்லிவாக்கம் இரயில் நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள “மேயர் சிட்டிபாபு மேம்பாலம்” திறந்து வைத்தல்.**

கொளத்தூர் மற்றும் வில்லிவாக்கம் பகுதியில் வசிக்கும் மக்கள் சந்திக்கடவு எண்.1 அடிக்கடி மூடப்படுவ தால் அதனை கடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர். எனவே, பொதுமக்களின் சிரமத்தை நீக்கும் வகையில் வில்லிவாக்கம் சந்திக்க டவு எண்.1க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதான சாலையையும், தெற்கில் ஐ.சி.எப். சாலையையும் இணைக்கும் வண்ணம் 61 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 500 மீட்டர் நீளம் மற்றும் 8.50 மீட்டர் அகலத்தில் கட்டப்பட்டுள்ள இருவழி மேம்பாலத்திற்கு “மேயர் சிட்டிபாபு மேம்பாலம்” எனப் பெயர் சூட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேயர் சிட்டிபாபு என்று அழைக்கப்படும் சொக்கலிங்க சிட்டிபாபு அவர்கள் 1967 மற்றும் 1971ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகராட்சிக்கு முதன்முதலில் 1958ஆம் ஆண்டு மாமன்ற உறுப்பினராகவும், பின்னர் 1964ஆம் ஆண்டு சென்னை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியினை சிறப்பாக மேற்கொண்டார். மேயர் சிட்டிபாபு அவர்கள் 1976ஆம் ஆண்டு மிசா சட்டத்தின் படி கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, அங்கு ஏற்பட்ட காயங்க ளால் 1977ஆம் ஆண்டு உயிரிழந்தார். மறைந்த மேயர் சிட்டிபாபு அவர்களை சிறப்பிக்கும் வகையில் வில்லிவாக்கம் அருகில் கிழக்கு சந்திக்கடவு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு “மேயர் சிட்டிபாபு மேம்பாலம்”எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இம்மேம்பாலமானது, கொளத்தூர் பகுதியை அண்ணா நகர் பகுதியுடன் இணைக்கும் முக்கிய இணைப்பு பாலமாகும். இம் மேம்பாலத்தினால் கொளத்தூர் ஜி.கே.எம். காலனி, பெரியார் நகர், கொரட்டூர் பாடி, ஐ.சி.எப். அண்ணா நகர் மற்றும் பெரம்பூர் பகுதிகளை சார்ந்த சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் திட்டப்பகுதியில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட 51நபர்களுக்கு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் இன்றையதினம் வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

முன்னதாக, ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர், வீனஸ் நகர், ஜெயந்தி நகர் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு பாதாள குழாய் மூலம் கழிவுநீர் அகற்றும் திட்டம் மற்றும் உந்து நிலையம் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## “ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி”

# 1,866 பயனாளிகளுக்கு ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், மே 15 - முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையிலான அரசின் ”ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி” 1,866 பயனாளிகளுக்கு ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொடுவாய் சுப்பராய கவுண்டர் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையிலான அரசின் ”ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி” அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 08.05.2023 திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 303 பயனாளிகளுக்கு ரூ.36.36 இலட்சம் மதிப்பீட்டில் இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித் தொகையையும், 251 பயனாளிகளுக்கு ரூ.30.12 இலட்சம் மதிப்பீட்டில் விதவை உதவித் தொகையையும், 10 பயனாளிகளுக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் ஊனமுற்றோர் உதவித் தொகையையும், 3 பயனாளிகளுக்கு ரூ.36,000 மதிப்பீட்டில் உழவர்பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் உதவித் தொகையையும், 05 பயனாளிகளுக்கு ரூ.60,000 மதிப்பீட்டில் கணவரால் கைவிடப்பட்டவர் உதவித் தொகையையும், 05 பயனாளிகளுக்கு ரூ.60,000 மதிப்பீட்டில் ஆதரவற்ற விதவை உதவித் தொகையையும், 07 பயனாளிகளுக்கு ரூ.84,000/ மதிப்பீட்டில் முதிர் கன்னி உதவித் தொகையையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் 16 பயனாளிகளுக்கு ரூ.13.36 இலட்சம் மதிப்பீட்டில் பெட்ரோல் ஸ்கூட்டர்களையும்,

ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் 600 பயனாளிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான உதவியையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியிடத்து விபத்து மரண உதவித் தொகையையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறையின் சார்பில் 83 பயனாளிகளுக்கு தனி நபர் குடியிருப்பு உரிமை ஆவணங் களையும், 85 பயனாளிகளுக்கு தனி நபர் விவசாய உரிமை ஆவணங்களையும், 5பயனாளிகளுக்கு ரூ.29,865 மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரங்களையும், 76 பயனாளிகளுக்கு ரூ.58.35 இலட்சம் மதிப்பீட்டில் இ பட்டாக் களையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 26 பயனாளி களுக்கு ரூ.1.56 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், 19 பயனாளிகளுக்கு ரூ.92,549 மதிப்பீட்டில் விலையில்லா தேய்ப்பு பெட்டிகளையும்,

வோளண்மைத்துறையின் சார்பில் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.13,353 மதிப்பீட்டில் தார்பாலின்களையும், 24 பயனாளிகளுக்கு ரூ.35,095 மதிப்பீட்டில் பண்ணைக்கருவிகள் தொகுப்புகளையும், வேளாண் காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.45315 மதிப்பீட்டில் மரங்கன்றுகளையும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ரூ.56,000 மதிப்பீட்டில் விசைத் தெளிப்பான் களையும், பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் 5 பயனாளி களுக்கு ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் தெளிப்பான்களையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் டிராக்டரையும், மகளிர் திட்டம்

தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் புரிவோருக்கு தனி நபர் கடனுதவிகளையும், 70 பயனாளிகளுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியுதவிகளையும், 100 பயனாளிகளுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சுய உதவிக்குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியுதவியையும், 1 பயனாளிக்கு ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் பெருங்கடனுதவியையும், மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மகாநதி குழு குடிசை மாற்றுவாரிய வீடு ஒதுக்கீடுக்கான கடனுதவியையும், தாட்கோ மூலம், 2 பயனாளிகளுக்கு ரூ.3.93 இலட்சம் மதிப்பீட்டில் டூரிஸ்ட் வண்டி கடனுதவியையும்,

2 பயனாளிகளுக்கு ரூ.2.38 இலட்சம் மதிப்பீட்டில் பேசன்ஜர் ஆட்டோ வண்டி கடனுதவியையும், 2 பயனாளிகளுக்கு ரூ.31.52 இலட்சம் மதிப்பீட்டில் லோடு வண்டி கடனுதவியையும், 1 பயனாளிக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை உதவித்தொகையினையும், 1 பயனாளிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் விவசாய உரக் கடை கடனுதவியும், 1 பயனாளிக்கு ரூ.2.24 இலட்சம் மதிப்பீட்டில் ஆடு வளர்ப்பு உதவித் தொகையும், 1 பயனாளிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் வாடகைப் பத்திரக்கடை உதவித்தொகையும் என மொத்தம் 1866 பயனாளிகளுக்கு ரூ.3,69,58,321 மதிப்பீட்டிலான நல்த்திட்ட உதவிகளை செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் குமரேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், திட்ட இயக்குநர் வரலட்சுமி, தனித்துணை ஆட்சியர் அம்பாயிரநாதன், எஸ்.பாலுசாமி, சிவ.செந்தில்குமார், ந.இராஜேந்திரகுமார், கீர்த்தி சுப்ரமணியம், முத்துரத்தினம், லதா வெங்கடாசலபதி, ஒன்றிய கவுன்சிலர் அ.பாலகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி: மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

### தென்காசி தெற்கு மாவட்டம்

**தலைவர்** -பாலசுப்ரமணியன்,கீழப்புலியூர், தென்காசி.

**துணைத் தலைவர்**-நசீர் (எ) அகம்மதுமீரான்,நெ.34 வீர கேரள விநாயகர் கோவில் தெரு, செங்கோட்டை.

**அமைப்பாளர் -வே.கோமதிநாயகம்**, நெ.91 கூலக்கடை பஜார், தென்காசி 627 811.

**துணை அமைப்பாளர்கள்**-கருணாநிதி,நெ.1/95 வடக்கு தெரு, கீழ ஆம்பூர், காளிதாஸ்,நெ.82, 81, காடுவெட்டி,புதூர். சு.கணபதி, நெ.3/15 வடக்குத்தெரு,தட்டப்பாறை, வீ.கே. புதூர் தாலுக்கா, எ.ஆர்.ஆனந்த்,நெ.28,பெருமாள் கோவில் தெரு, முக்கூடல்,வி.டி.எம். அலி நெ.67/205 அல்லிமுப்பன் தெரு,கடையநல்லூர்,திருமலைக்குமார், நெ.7/19 பூபாண்டியபுரம், குலையநேரி அஞ்சல்,வீ.கே.புதூர் தாலுக்கா.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

**தலைவர்** -செ.ராஜசேகரன்,9/21பிகண்டன்விளை,கன்னியகுமாரி மாவட்டம்.

**துணைத் தலைவர்**-லெ. ரெத்தின ராஜ், 8/13பி மேல்கரை நெய்யூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

**அமைப்பாளர் -சு.முருகபெருமாள்**, 27 வாகையடி வடக்கு ரத வீதி, கோட்டார், நாகர்கோவில்,கன்னியாகுமரி மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்**-செ.பால மனோகர், பொட்டல் குழி அம்மாண்டி விளை (அ) கன்னியாகுமரி மாவட்டம். இரா.சோ.கோபால், த/பெ இரா.சோமசுந்தரம் (எ) முருகேசன், 2/45 வடக்கு தெரு, குலசேகரபுரம் (அ) கன்னியாகுமரி மாவட்டம்,து.சுயம்பு,த/பெ துரைமணி,6/83 ஆலந்தங்கரை இராஜாக்க மங்களம் (அ) கன்னியாகுமரி மாவட்டம், நா.மனோகரன்,த/பெ லெ.நாராயண பெருமாள், 22/20 வடலிக்காட்டுவிளை,தெற்கு சூரங்குடி (அ) கன்னியாகுமரி மாவட்டம்.நா.கணேசன்,த/பெ நாகமணி பிள்ளை,121144 சிவா மருத்துவமனை அருகில், ஜோதி நகர், இரணியல், நெய்யூர் அஞ்சல்,கன்னியாகுமரி மாவட்டம் .

### திருச்சி வடக்கு மாவட்டம்

**தலைவர்**-பி.லோகநாதன், 3/78,அண்ணா நகர், மங்களம் அஞ்சல், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

**துணைத் தலைவர்** -க.சதீஸ்குமார்,சி.ஆர்.பாளையம்,சிறுகனூர் அஞ்சல்,மணச்சநல்லூர் வட்டம்,திருச்சி மாவட்டம்.

**அமைப்பாளர் -என். கருப்பையா**,16, முருங்கை &அஞ்சல், தொட்டியம் வட்டம்,திருச்சி மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்**-எஸ். கல்யாணசுந்தரம்,2/74, அழிஞ்சு குத்துபள்ளம்,மேட்டுப்பட்டி அஞ்சல்,முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.வி.கனகராஜ்,கிழக்கு தெரு,சீலைப்பிள்ளையார்புதூர் அஞ்சல்,தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம். எஸ்.தண்டபாணி,ரெட்டியார் தெரு, எம்.களத்தூர் அஞ்சல்,தொடியம் வட்டம், திருச்சி மாவட்டம்.வி.பாஸ்கர்,10, சொக்கனாதபுரம்,வீரமச்சான்பட்டி, துறையூர் வட்டம்,திருச்சி மாவட்டம்.வி.டி.கோவிந்தசாமி,74சி, மேலத் தெரு,வாளசிராமணி அஞ்சல்,முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.என். முருகானந்தம்,5/3, சேங்குடி தெரு,அழகிய மணவாளம் அஞ்சல்,மணச்சநல்லூர், திருச்சி மாவட்டம்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

**தலைவர்** எஸ். ரவிக்குமார்,97, பனங்குளம் வடக்கு,ஆலங்குடி,புதுகோட்டை மாவட்டம்.

**துணைத் தலைவர்** -கே. சுப்பிரமணியன்,இடையூர், செங்கானம் ஊராட்சி,ஆவுடையார்கோவில் தாலுக்கா,புதுக்கோட்டை மாவட்டம்.

**அமைப்பாளர் - மு.இராமலிங்கம்**,138, செவலூர் &அஞ்சல்,பொன்னமராவதி,புதுக்கோட்டை மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** -ஏ.வெள்ளைச்சாமி,40, மேலப்பனையூர்,திருமயம் தாலுக்கா,புதுக்கோட்டை மாவட்டம். எம். பழனியப்பன்,அரண்மனைப்பட்டி &அஞ்சல், திருமயம் தாலுக்கா,புதுக்கோட்டை மாவட்டம். சி.காசிநாதன்,67/1, காந்தி பூங்கா ரோடு,அறந்தாங்கி.புதுக்கோட்டை மாவட்டம்.வி.சுந்தரம், நிலையூர், குடிக்காடு,பிராமணவயல், புதுக்கோட்டை மாவட்டம்.மு.அருணாச்சலம்,அமரசிம்மேந்திரபுரம், ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம். ம.பழனியப்பன்,மேற்பனைக்காடு&அஞ்சல், அறந்தாங்கி தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம்.

**“அண்ணாஅறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 13.05.2023.

**அன்னியூர் சிவா,**
செயலாளர்,
தி.மு.க.விவசாயத் தொழிலாளர் அணி.

# தி.மு. கழக அயலக அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

தி.மு. கழக அயலக அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகின்ற 17.05.2023 புதன்கிழமை மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற இருக்கின்றது. கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தலைமையில் கூட்டம் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் கழக அயலக அணி இணை, துணைச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக ஆக்கப் பணிகள்

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.**
செயலாளர் - தி.மு.க. அயலக அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.பாலு (எ) திராவிட பாலு
### மே 15 (2013)



**இளமைக் காலம் முதற்கொண்டு திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு திருவள்ளூர் மாவட்டம், கன்னிகைப்பேர் கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், இருமுறை எல்லாபுரம் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், மூன்று முறை கன்னிகைப்பேர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**